# செயலாற்றுகை அறிக்கை

2025 – இரண்டாவது காலாண்டு

2025

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

## நோக்கு

"நேர்மையை ஊக்கப்படுத்தும்
நியாயமானதும் ஊழலற்றதுமான இலங்கை
தேசத்தை நோக்கி"

## செயற்பணி

சட்டத்தை உறுதியாக அமுல்படுத்தல், தடுப்பு பொறிமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய ஆட்சியினூடாக ஊழலை ஒழித்து அதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு உதவுதல், அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் மற்றும் நாட்டின் வளங்களைப் பாதுகாத்தல்.


| உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| அறிமுகம் | 01 |
| முறைப்பாடுகளை சமர்ப்பித்தல் | 04 |
| புலனாய்வுகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் | 06 |
| வழக்கு தொடுத்தல் மற்றும் வழிநடாத்தல் | 07 |
| தடுப்பு நடவடிக்கைகள் | 10 |
| மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம் | 13 |

# 01. அறிமுகம்

2023 ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளதோடு, சட்டத்தின் 3(2) உட்பிரிவின் பிரகாரம் அது குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவும் இடையறா வழியுரிமையையும் கொண்டிருத்தல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே, ஆணைக்குழுவுக்கு சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை பிரயோகிக்கும் போது அல்லது பணிகளை புரியும் போது சட்டத்தின் கீழ் உரித்துடையதாகவுள்ள ஒரு நீதிமன்றம் அல்லது நியாயசபை தவிர வேறு எந்தவித தலையீட்டுக்கும் கீழ்படியாது சுயாதீனமாக செயற்படவேண்டுமென 3(4) உட்பிரிவின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1.1 ஆணைக்குழுவின் அமைப்பு

### 1.1.1 ஆணைக்குழு உறுப்பினர்கள்

2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 4(1) உட்பிரிவின் பிரகாரம் சட்டத்தில் நிபுணத்துவம் கொண்டவரும், மேன்மையடைந்தவரும் மற்றும் ஆகக் குறைந்தது (20) இருபதாண்டுளைக் கொண்ட அனுபவத்தை கொண்டுள்ளவருமான ஆளொருவர், அத்துடன் பின்வரும்

I. குற்றப்புலனாய்வு மற்றும் சட்ட வலுவுறுத்தல்
II. சட்ட – மருத்துவக் கணக்காகய்வு
III. சட்ட – மருத்துவக் கணக்கியல்
IV. பெறியியல்
V. சர்வதேச தொடர்புகளும் இராஜதந்திரச் சேவைகளும்
VI. பொதுமக்கள் அலுவல்கள் முகாமை
VII. பொது நிர்வாகம்

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில், நிபுணத்துவம் கொண்டவர்களும் மேண்மையடைந்தவர்களும் மற்றும் ஆகக் குறைந்தது (20) இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தை கொண்டவர்களுமான இரண்டு ஆட்களும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.

அதற்கிணங்க,

- முன்னாள் மேன்முறையீட்டு நீதிபதி மற்றும் முன்னாள் பாராளுமன்ற பிரதி செயலாளர் திரு. டபிள்யு.எம்.என்.பி. இத்தவெல அவர்கள் - தவிசாளர்
- சிரேஷ்ட வங்கி அதிகாரியான மக்கள் வங்கியின் முன்னாளர் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் திரு.கே. பேர்னார்ட் ராஜபக்ஷ அவர்கள் - உறுப்பினர்
- மேலதிக மன்றாடியார் அதிபதி சனாதிபதி சட்டத்தரணி திரு. சேதிய குணசேகர அவர்கள் - உறுப்பினர்

ஆகிய உறுப்பினர்கள் மூவரும் 2024 சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் கடமைகளை ஆரம்பித்தனர்.

### 1.1.2 ஆணையாளர் நாயகம்


2023 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 17(1) இன் படி நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதி ரங்க ஸ்ரீநாத் அபேவிக்ரம திசாநாயக்க, 2025 ஜனவரி 10 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக பொறுப்பேற்றார்.

## 1.2 ஆணைக்குழுவின் செயற்பாடுகள்.

1. 2023 இல 09 எனும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் நியாயமான புலனாய்வுகளை மேற்கொள்ளல், போதியளவு சான்றுகள் உள்ள முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்தல் மற்றும் நீதிமன்றங்களில் அந்த வழக்குகளை வழிநடாத்தல்.
2. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடங்கள் தொடர்பில் மத்திய அதிகாரபீடமாக செயற்படுதல்.
3. ஊழலை தடுக்கும் பொருட்டு இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள சர்வதேச ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் பொருந்தனைகளை நடைமுறைப்படுத்தல்.
4. ஊழல் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களின் தெளிவை அதிகரித்தல்.
5. ஊழல் எதிர்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.
6. ஊழல் செயற்பாடுகளை கண்டறிவதற்காக அரச நிறுவனங்களின் சட்ட விதிகள், செயற்கோவைகள் மற்றும் நடவடிக்கை முறைகளைப் பரிசோதித்தல்.
7. ஊழலை ஒழிப்பதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளை வழங்குதல்.
8. ஊழலைக் குறைக்கும் பொருட்டு தேவையான சட்டத் திருத்தங்கள் தொடர்பில் பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல்.
9. ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாட் குழுவினரின் நியமனம், பதவி உயர்வு மற்றும ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள்.

## 1.3 ஆணைக்குழுவின் கட்டமைப்பு

தற்போது, ஆணைக்குழுவின் நிறுவன அமைப்பு பின்வருமாறு காணப்படுகின்றது. மேலும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தால் முன்னைய சட்டங்களால் வழங்கப்பட்டிருந்த கடமைகள் மற்றும் பொறுப்புகள் மாற்றம் அடைந்துள்ளதால் முன்னயை செயல்களுக்கு மேலதிகமாக ஆணைக்குழுவினால் பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. எனவே ஆணைக்குழுவின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.



## 02. முறைப்பாடுகளை சமர்ப்பித்தல்

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை பின்வரும் வழிகளில் இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு அனுப்ப முடியும்.

- 1954 எனும் இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம்
- குயஒ செய்தி மூலம்
- மின்னஞ்சல் மூலம்
- சமூகமளித்து கைகளால் ஒப்படைத்தல்
- அலுவலக முகவரிக்கு பெயர் குறிப்பிட்டு அல்லது அனாமேதய அடிப்படையில் கடிதங்களை சமர்ப்பிப்பதன் மூலம்


2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பொதுமக்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் பொதுமக்கள் காட்டும் ஆர்வம் அதிகரித்தல் மற்றும் ஊழல் தடுப்பு பிரவினால் நாடு பூராகவும் நடாத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பிரஜைகள் அறிவூட்டப்படுகின்ற காரணத்தினால் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் கடந்த ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முறைப்பாடுகளின் அதிக வளர்ச்சிப் போக்கே காணப்படுகின்றது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் செயலகத்தினால் பரிசீலித்த பின்னர் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கு சட்டத்துடன் தொடர்பில்லாத மற்றும் போதுமான உண்மைகளை வெளிப்படுத்தாத முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்தாமலிருப்பதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். 2014 முதல் 2024 செப்டம்பர் மாதம் வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கையும், விசாரணைக்காக பரிந்துரைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு.

**கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் புலனாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 2015 – 2025 செப்டம்பர் வரை**

| வருடம் | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் | புலனாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை ** |
|---|---|---|
| 2015 | 3,964 | 1,823 |
| 2016 | 3,450 | 2,435 |
| 2017 | 2,768 | 1,573 |
| 2018 | 3,465 | 2,086 |
| 2019 | 3,305 | 2,020 |
| 2020 | 2,764 | 1,909 |
| 2021 | 2,335 | 892 |
| 2022 | 2,512 | 921 |
| 2023 | 3,431 | 1,152 |
| 2024 | 4,267 | 1,105 |
| 2025 இரண்டாம் காலாண்டு வரை | 3,022 | 249 |

** சுற்றிவளைப்புக்காக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் இல்லாமல்




புலனாய்வு மேற்கொள்வதற்கு உத்தவிடப்பட்ட முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவுக்கு முன்னளிப்புச் செய்யப்படுவதோடு, வேறு நிறுவனங்களிலிருந்து அறிக்கைகளை கோருவதற்கு மற்றும் புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்கு உள்ள சாத்தியப்பாடு தொடர்பில் பரிசீலிப்பதற்கு சட்ட அறிக்கைகளை கோருவதற்குத் தேவையான முறைப்பாடுகள் தொடர்பில் ஏற்புடைய நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் செயலகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

**ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ள முடியுமான முறை**

**துரித அழைப்பு : 1954**

**மின்னஞ்சல் : ciaboc_gen@ciaboc.gov.lk**

**தொலைநகல் : 0112596360**

**முகவரி : 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07**

**ஆணைக்குழுவுக்கு நேரடியாக வருகைத்தந்தும் கையளிக்க முடியும்.**

## 03. புலனாய்வுகள் மற்றும் சோதனைகள்

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான புலனாய்வுகள் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டத்தின் 42 ஆவது பிரிவின்படி,

- ஏதேனும் தகவல்களைப் பெற்ற பின்னர்
- முறைப்பாட்டைப் பெற்ற பின்னர்
- ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் அல்லது
- ஆணைக்குழுவினால் பெறப்பட்ட வேறு ஏதேனும் முக்கியமான விடயத்தின் அடிப்படையில்

ஆரம்பகட்ட விசாரணைகளை ஆரம்பிக்க முடியும். சட்டத்தின் பிரிவு 41 இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று புரியப்பட்டுள்ளதென ஆணைக்குழு திருப்தி அடைந்தால், புலனாய்வுகளை நடத்த முடிவு செய்யலாம். எவ்வாறாயினும், பிரிவு 41 இன் கீழ் குற்றம் புரியப்பட்டுள்ளதென நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக ஆணைக்குழு திருப்தியடையுமிடத்து ஆரம்பகட்ட விசாரணையை நடத்தாமல் புலனாய்வுகளை ஆரம்பிக்க முடியும்.

### 3.1 புலனாய்வு நடவடிக்கைகள்

ஆணைக்குழுவினால் 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.03.31 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் புலனாய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 178 இற்குரிய கோப்புகளின் புலனாய்வு நடவடிக்கைகள் புலனாய்வுப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இதற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற கோப்புக்களையும் உள்ளடக்கி 2025.03.31 ஆம் திகதியளவில் 2,337 கோப்புக்களின் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2 சுற்றிவளைப்புகள் மற்றும் கைதுசெய்தல்

இலஞ்சம் பெற்றுக்கொள்ளல் அல்லது இலஞ்சம் கொடுத்தல் தொடர்பான நிகழ்வுகள் பற்றிய போதிய தகவல்கள் மற்றும் முறைப்பாட்டாளரின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் ஏற்புடைய குற்றம் நிகழும் சந்தர்ப்பத்தில் சுற்றிவளைப்பை மேற்கொண்டு கைதுகள் மேற்கொள்ளப்படும். 2025 ஆம் ஆண்டின் அவ்வாறான சுற்றிவளைப்புகள் 24 மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அவற்றில் 15 வெற்றியளித்துள்ளன. சுற்றிவளைப்புக்களின் போது 20 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### 3.3 2020 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் செய்யப்பட்ட கைதுகள்

| வருடம் | மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை | சுற்றிவளைப்புக்களின் போது கைதுசெய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 2020 | 38 | 45 |
| 2021 | 33 | 36 |
| 2022 | 32 | 36 |
| 2023 | 43 | 57 |
| 2024 | 53 | 86 |
| 2025 இரண்டாம் காலாண்டு வரை | 27 | 34 |

### 3.3.1 சுற்றிவளைப்புக்கள் மூலம் செய்யப்பட்ட கைதுகள் தவிர வேறு வழிகளில் செய்யப்பட்ட கைதுகள் மூலம் கைதான சந்தேச நபர்கள் பற்றிய தகவல்கள். (2025.01.01 முதல் 2025.06.30 வரை)


| இல | கைது செய்யப்பட்ட நபர்களின் பெயர் மற்றும் ஏனைய தகவல்கள் |
|---|---|
| 01. | மஹிந்த தேவப்பிரிய (பொதுமகன்) |
| 02. | பாலகே மேலகா தீபாலி மானெல் (பொதுமகன்) |
| 03. | டொன் ஹரீந்தர ஷானக அய்லப்பெரும (முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், மத்திய மாகாண சபை – வழக்கு 02க்குத் தொடர்பானது |
| 04. | டொன் ஆதர் சாமர சம்பத் தஸனாயக்க (முன்னால் பிரதான அமைச்சர், ஊவா மாகாணம், - வழக்கு 03களுக்குத் தொடர்பானது |
| 05. | ராஜகருணா மனமேந்தலலாகே சுனில் காமினி (முன்னாள் பிரதான செயலாளர், ஊவா மாகாணம்) |
| 06. | முனிகன் எதிரிசிங்க சுமித்ரா சில்வா (பிரதி செயலாளர் (நிதி), ஊவா மாகாணம்) |
| 07. | மஹேஷ் லக்ஷ்மன் கம்மன்பில (முன்னால் மேலதிக செயலாளர், விவசாயத் திணைக்களம்) |
| 08. | கெஹெலிய பண்டார திஸாநாயக்க ரம்புக்வெல்ல (முன்னால் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் - 04 வழக்குகளுக்குத் தொடர்பானது |
| 09. | ரமித ரம்புக்வெல்ல (கெஹெலிய பண்டார ரம்புக்வெல்ல அவர்களின் மகன்) – 03 வழக்குகளுக்குத் தொடர்பானது) |
| 10. | நிஷாந்த பண்டார பஸ்நாயக்க (கெஹெலிய பண்டார ரம்புக்வெல்ல அவர்களின் மகன்) – 03 வழக்குகளுக்குத் தொடர்பானது) |
| 11. | ராஜபக்ஷ சுபசிங்க பதிரனகே நிபுனி கிருஷ்ணஜிதா (கெஹெலிய பண்டார திஸாநாயக்க ரம்புக்வெல்ல அவர்களின் மகள்) |
| 12. | அதுகோரல டோன் உதேனி பிரியங்க (முன்னால் தவிசாளர், வல்லாவிட பிரதேச சபை) |
| 13. | விதான பதிரனகே மிலான் சஜித் ஜயதிலக (முன்னால் தவிசாளர், தோம்பே பிரதேச சபை) |
| 14. | லியனராச்சிகே பிரசாத் ஹர்சன டீ சில்வா (முன்னால் தலைவர், காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்) |
| 15. | ஏனநாயக்க வலவ்வ அசேல (முன்னால் தவிசாளர், குண்டசாலை பிரதேச சபை) |
| 16. | விஜேசுந்தர லேகம்லாகே டிலாந்த நுவன் குமார (பிரதி ஆணையாளர், மோட்டார் வண்டி உரிமம் மாற்றும் பிரிவு, மோட்டார் வாகன திணைக்களம்) |
| 17. | கிரிவத்குடா ராலலாகே பிரதீப் நிஸாந்த பெரேரா, |
| 18. | துவடகே சமந்த பெரேரா (முகாமைத்துவ உத்தியோகத்தர் - மோட்டார் வாகன திணைக்களம்) |
| 19. | விதாரனகே இத்தமல்கொட சுதர்ஷன சந்திரகுமார பிரனாந்து (முன்னால் தலைவர், இலங்கை மீன்பிடி மற்றும் துறைமுக கூட்டுத்தாபனம்) |
| 20. | அனகிபுர அசோக சேபால (முன்னால் தலைவர், லிதுல நகர சபை) |
| 21. | மஹேஷி சூரசிங்க விஜேரத்ன (நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் - ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை) |
| 22. | முதுகுட ஆரச்சிகே நிமல் ரஞ்சித் முதுகுட (பொது குடிமகன்) |
| 23. | குகலந்தல லியனகே இந்திக (வாட்டு இலகிதர், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை) |
| 24. | குசும் பிரியதர்ஷனி ஏபா வைஹேன (கெஹெலிய பண்டார திஸாநாயக்க ரம்புக்வெல்ல என்பவரின் மனைவி) |
| 25. | சந்துலி ரமலி ரம்புக்வெல்ல (கெஹெலிய பண்டார திஸாநாயக்க ரம்புக்வெல்ல என்பவரின் மனைவி) |
| 26. | சீமாஹேவகே ஜனக ஸ்ரீ சந்திரகுப்த (முன்னால் செயலாளர், சுகாதார அமைச்சு) |
| 27. | நிஸ்ஸங்க ஜீவக கண்டுல சில்வா (சிலாபம் மாவட்ட / நீதிதவான் நீதிமன்ற மேன்முறையீட்டு அதிகாரி |
| 28. | உபாலி லியனகே (முன்னால் தலைவர், இலங்கை மீன்பிடி மற்றும் துறைமுக கூட்டுத்தாபனம்) |
| 29. | அந்தோனி நிஸாந்த விக்ரமசிங்க (முன்னால் தலைவர், இலங்கை விமான சேவை) |

## 04. வழக்கு தொடுத்தல்

புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்து வழக்குத் தொடர முடியுமான கோவைகள் தொடர்பில் வழக்குகளைத் தொடுக்கும் பணி ஆணைக்குழுவின் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் 83 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளதோடு, அக்காலப் பிரிவில் நிறைவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை 69 ஆகும்.


### 4.1 2020 ஆம் ஆண்டு முதல் 2025 முதலாம் காலாண்டு வரை தொடுக்கப்பட்ட வழக்குகளின் தகவல்கள்

| வருடம் | இலஞ்ச வழக்குகள் | ஊழல் வழக்குகள் | முறையற்ற சொத்துக்குவிப்பு வழக்குகள் | சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிக்காட்டாத வழக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2020 | 47 | 1 | 2 | -- | 50 |
| 2021 | 58 | 2 | -- | 2 | 62 |
| 2022 | 62 | 26 | -- | 1 | 89 |
| 2023 | 55 | 3 | 2 | -- | 60 |
| 2024 | 70 | 10 | 3 | -- | 83 |
| 2025 இரண்டாம் காலாண்டு | 28 | 15 | 07 | -- | 50 |



### 4.2 2020 ஆம் ஆண்டு முதல் 2025 முதலாம் காலாண்டு வரை நிறைவடைந்த வழக்குகளின் தகவல்கள்

<table>
<tr><th>வருடம்</th><th>இலஞ்ச வழக்குகள்</th><th>ஊழல் வழக்குகள்</th><th>முறையற்ற சொத்துக்குவிப்பு வழக்குகள்</th><th>சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிக்காட்டாத வழக்குகள்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>2020</td><td colspan="2">52</td><td>03</td><td>--</td><td>55</td></tr>
<tr><td>2021</td><td colspan="2">62</td><td>05</td><td>02</td><td>69</td></tr>
<tr><td>2022</td><td colspan="2">90</td><td>--</td><td>07</td><td>97</td></tr>
<tr><td>2023</td><td>58</td><td>10</td><td>01</td><td>--</td><td>69</td></tr>
<tr><td>2024</td><td>62</td><td>07</td><td>--</td><td>--</td><td>69</td></tr>
<tr><td>2025 இரண்டாம் காலாண்டு</td><td>30</td><td>05</td><td>01</td><td>00</td><td>36</td></tr>
</table>



## 4.3 2015 ஆம் ஆண்டு முதல் 2025 முதலாம் காலாண்டு வரை, தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, நிறைவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை

| வருடம் | தொடுக்கப்பட்ட வழக்குகள் | | | | நிறைவுசெய்யப்பட்ட வழக்குகள் | | | | எதிராளிகள் மற்றும் குற்றவாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மேல் நீதிமன்றம் | நீதவான் நீதிமன்றம் | மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதிபதி | மொத்தம் | மேல் நீதிமன்றம் | நீதவான் நீதிமன்றம் | மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதிபதி | மொத்தம் | |
| 2015 | 76 | 32 | 0 | 108 | 41 | 11 | 0 | 52 | 15 |
| 2016 | 43 | 44 | 0 | 87 | 26 | 08 | 0 | 34 | 15 |
| 2017 | 41 | 32 | 0 | 73 | 68 | 20 | 0 | 88 | 57 |
| 2018 | 36 | 16 | 0 | 52 | 84 | 26 | 0 | 110 | 64 |
| 2019 | 37 | 09 | 0 | 46 | 75 | 19 | 0 | 94 | 54 |
| 2020 | 42 | 08 | 0 | 50 | 46 | 09 | 0 | 55 | 28 |
| 2021 | 57 | 05 | 0 | 62 | 43 | 26 | 0 | 69 | 09 |
| 2022 | 77 | 12 | 0 | 89 | 64 | 32 | 0 | 96 | 22 |
| 2023 | 56 | 04 | 0 | 60 | 60 | 09 | 0 | 69 | 19 |
| 2024 | 79 | 04 | 0 | 83 | 56 | 13 | 0 | 69 | 30 |
| 2025.06.30 வரை | 50 | 0 | 0 | 50 | 31 | 4 | 1 | 36 | 24 |

## 4.4 2025.01.01 முதல் 2025.06.30 ஆம் திகதி வரை நீதிமன்ற தீர்ப்புகளால் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட பிரதிவாதிகளின் விபரங்கள்

| தொ. இல | நிறுவனம் | குற்றவாளியாக்கப்பட்ட உத்தியோகத்தரின் பதவி | குற்றவாளியாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சுகாதாரத் திணைக்களம் | சுகாதாரப் பணியாளர் - குளியாப்பிட்டி அரச மருத்துவமனை | 1 |
| 02 | பொலிஸ் திணைக்களம் | போலிஸ் காண்ஸ்டபிள் | 1 |
| 03 | கல்வி அமைச்சு | ஆதிபர் | 1 |
| | | பொதுமக்கள் | 3 |
| 04 | பிரதேச செயலகம் | தொழிநுட்ப அதிகாரி | 1 |
| 05 | | பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் | 1 |
| 06 | அஞ்சல் திணைக்களம் | அலுவலக உதவியாளர் | 1 |
| 07 | குடிவரவு, குடியகழ்வு திணைக்களம் | முகாமைத்துவ உத்தியோகத்தர் | 1 |
| | சுாலைகள் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை | அலுவலக உதவியாளர் | 1 |
| 08 | வடமத்திய மாகாண சபை | பிரதான அமைச்சர் | 1 |
| | | பிரத்தியேக செயலாளர் | 1 |
| 09 | திவி நெகும | அபிவிருத்தி உத்தியோத்தர் | 1 |
| 10 | மதுவரித் திணைக்களம் | மதுவரி கட்டுப்பாட்டாளர் | 2 |
| 11 | இலங்கை ச.தொ.ச திணைக்களம் | முன்னால் ச.தொ.ச. தவைர் (முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்) | 1 |

| | | | |
|---|---|---|---|
| 12 | விளையாட்டு அமைச்சு | முன்னால் விளையாட்டு அமைச்சர் | 1 |
| 13 | நீதவான் நீதிமன்றம் | பதிவாளர் | 1 |
| 14 | இலங்கை மகாவெலி அதிகார சபை | காணி உத்தியோகத்தர் | 1 |
| 15 | பிரதேச மின் பொறியியலாளர் காரியாலயம் | | 1 |
| **மொத்தம்** | | | **24** |

## 4.5 விசாரணை இடம்பெற்றுவரும் வழக்குகள்

**2025 மார்ச் 31 ஆம் திகதி வரை நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் 273 வழக்குகளின் விபரம் பின்வருமாறு**

நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 22

மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 250

மூவர் அடங்கிய மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 01

## 05. தடுப்பு நடவடிக்கைகள்

இலஞ்சம் மற்றும் ஊழலின் தீமைகள் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, நாடளாவிய ரீதியில், அரசாங்கத் துறை, தனியார் துறை, கல்வித் துறை மற்றும் பொதுமக்களை இலக்காகக் கொண்டு ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 5.1 2025.01.01 – 2025.06.30 வரை நடாத்தப்பட்ட தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய சாராம்ச தகவல்கள்

| **நிகழ்ச்சித்திட்டம் நடைப்பெற்ற நிறுவனம்** | **எண்ணிக்கை** |
|---|---|
| அரசாங்க நிறுவனங்களின் அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு | 32 |
| அரச சார்பு நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு | 65 |
| தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக | 16 |
| வேறு தரப்பினர் ஆட்களுக்கு | - |
| **மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **113** |

### 5.2 உள் விவகார அலகுகளின் தொடர்பாக நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் விவரங்கள்

அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் உள் விவகார அலகுகளை (ஐவெநசயெட யுககயசைள ருவைள - ஐயுரு) நிறுவி மற்றும் அதற்கான பிரதிநிதிகளை நியமிக்கும் வகையில், ஜனாதிபதியின் செயலாளரால் நிறுவப்பட்ட ீளு.்.ளுடீ.்.ஊசைஉரடயச.்.2.்.2025 என்ற சுற்றறிக்கை, 18.02.2025 அன்று வெளியிடப்பட்டது. இதன் அடிப்படையில், உள் விவகார அலகுகளை அமைக்கும் தொடர்பாக அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு வழங்கும் முதலாவது செயலமர்வு, 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்றது. இதில், 107 நிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இரண்டாம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களின் சுருக்கம் வருமாறு:

| **இல** | **இடம்பெற்ற திகதி** | **வுயசபநவ பசழரி** | **பங்குபற்றியோர் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | 14.05.2025 | அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் | 75 |
| 2 | 15.05.2025 | இணங்கானப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் | 56 |
| 3 | 16.05.2025 | இணங்கானப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் | 54 |
| 4 | 21.05.2025 | ஜனாதிபதி செயலகம் உயர் அதிகாரிகள், பிரதமர் அலுவலகம், உயர் அதிகாரிகள், பாராளுமன்ற அமைச்சரவை அதிகாரிகள், நீதிச் சேவை ஆணைக்குழு மற்றும் மாகாண ஆளுநர்கள் மற்றும் மாகாண மற்றும் மாவட்ட செயலாளர்கள் | 93 |
| 5 | 12,13.06.2025 | பத்து அடையாளம் காணப்பட்ட அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் உள் விவகார அலுவல்கள் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். | 46 |

## 6 மனிதவள மற்றும் பௌதீக வள மேலாண்மை.

ஆணையத்தின் கடமைகளைச் செய்வதற்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களின் மேலாண்மை மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் பின்வருமாறு.

### 6.1 மனித வள முன்னேற்றம் - உள்நாட்டு பயிற்சி பட்டறைகள்.

**(2025.04.01–2025.06.30 வரையான காலப்பகுதி/ 2025 இரண்டாம் காலாண்டிற்கானது)**

| தொ. இல | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் விபரம் | | காலப்பகுதி | செலவு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பதவி | எண்ணிக்கை | | |
| 1 | Training on effective personal file management | Management Service Officer<br>Development Officer | 2 | 29.04.2025 | Rs. 13,000/- |
| 2 | Office Management & Financial Regulations | Management Service Officer<br>Management Service Officer | 2 | 28.05.2025 & 29.05.2025 | Rs. 24,000/- |
| 3 | Scientific, safe and thrifty driving | Driver | 1 | 29.05.2025 | Rs. 6,000/- |
| 4 | ICT and AI for the efficiency of office work | Management Service Officer | 1 | 2025.05.28 & 29.05.2025 | Rs. 12,000/- |
| 5 | Workshop on the salient features of the procurement guidelines and manual | Management Service Officer | 1 | 29.05.2025 | Rs. 9,500/- |
| 6 | Attitude and skills development of the Office Employee Assistants' Service | Office Employee Assistant | 1 | 04.06.2025 | Rs. 7,500/- |
| 7 | Workshop on procurement guidelines and regulations | Management Service Officer | 2 | 24-26.06.2025 | Rs. 36,000/- |
| | | Development Officer | 1 | | |

**6.2 மனிதவள அபிவிருத்தி வெளிநாட்டுப் பாடநெறிகள் (2025.04.01 – 2025.06.30 வரை**

| தொ. இல | கருத்தரங்கு மற்றும் செயலமர்வு இடம்பெற்ற நாடு | செயமலர்வின் பெயர் | கலந்து கொண்ட உத்தியோகத்தர் | காலப்பகுதி | செலவு விபரம் |
|---|---|---|---|---|---|
| 01 | Washington - United States of America | Partnership for Anti-Corruption Global Forum | Mr. K.B. Rajapaksha - Commissioner - II | From 08/04/2025 to 09/04/2025 | Incidental Allowance – USD 200<br>Insurance<br>Rs. 3,974.05 |
| 02 | Singapore | ST25.13 Confronting Macro-Critical Corruption | Mrs. G.A.D. Sajeewani - Assi. Director General<br><br>Miss. W.M.T.D. Bandara - Assi. Director General | From 19/05/2025 to 23/05/2025 | Incidental Allowance – USD 86<br>Insurance<br>Rs. 8,809.98 |
| 03 | Austria - Vienna | The first resumed sixteenth session of the Implementation Review Group | Mr. R.S.A. Dissanayake - Director General<br><br>Miss. E.C. Jayakody - Asst. Director (Legal) | From 16/06/2025 to 20/06/2025 | Air Tickets – Rs. 608,000.00<br>Incidental Allowance – USD 560 Insurance<br>Combined Allowance –<br>USD 4,655<br>Rs. 9,669.14 |
| 04 | Azerbaijan | 06th Plenary Meeting of the Globe Network | Mrs. B.R.A. Jayasinghe - Assi. Director General | From 20/05/2025 to 23/05/2025 | Incidental Allowance – USD 240<br>VISA Fee –<br>Rs. 18,276.75 |

## 6.3 2025.06.30 வரை நிதிச் செலவுகள்

### Expenditure Report as at 30/06/2025

| Expenditure Subject No. | Finance Code | Category/Object/Item Description | Budgetary Allocation 2025 | Expenditure as at 30-06-2025 |
|---|---|---|---|---|
| 010-1-1-0-1001 | 11 | Salaries and Wages | 232,000,000.00 | 135,793,675.39 |
| 010-1-1-0-1001 | 21 | Salaries and Wages | 16,800,000.00 | 8,400,000.00 |
| 010-1-1-0-1002 | 11 | Overtime and Holiday Payments | 8,400,000.00 | 4,831,910.54 |
| 010-1-1-0-1003 | 11 | Other Allowances | 355,000,000.00 | 181,584,144.20 |
| 010-1-1-0-1101 | 11 | Travelling Expenses - Domestic | 6,000,000.00 | 2,694,427.00 |
| 010-1-1-0-1102 | 11 | Travelling Expenses - Foreign | 40,000,000.00 | 5,204,497.89 |
| 010-1-1-0-1201 | 11 | Stationary and Office Requisites | 20,000,000.00 | 5,785,931.16 |
| 010-1-1-0-1202(002) | 11 | Fuel Allowance | 100,000.00 | 5,254,565.81 |
| 010-1-1-0-1202(009) | 11 | Fuel for Pool Vehicles | 12,500,000.00 | 5,991,154.74 |
| 010-1-1-0-1202(010) | 11 | Fuel for Other Purposes | 20,400,000.00 | 0.00 |
| 010-1-1-0-1203(002) | 11 | Uniforms | 220,000.00 | 164,000.00 |
| 010-1-1-0-1301 | 11 | Vehicles | 25,000,000.00 | 9,189,166.54 |
| 010-1-1-0-1302 | 11 | Plant and Machinery | 11,000,000.00 | 1,778,063.54 |
| 010-1-1-0-1303 | 11 | Building and Stuctures | 12,300,000.00 | 189,043.20 |
| 010-1-1-0-1304 | 11 | Software Maintenance | 2,000,000.00 | 310,008.00 |
| 010-1-1-0-1401 | 11 | Transport | 2,100,000.00 | 600,000.00 |
| 010-1-1-0-1402 | 11 | Postal and Communication | 8,100,000.00 | 4,000,826.60 |
| 010-1-1-0-1403 | 11 | Electricity and Water | 36,000,000.00 | 20,085,386.09 |
| 010-1-1-0-1404 | 11 | Rent and Local Taxes | 68,000,000.00 | 83,254.19 |
| 010-1-1-0-1405 | 11 | Cleaning and Janitorial Services | 13,200,000.00 | 7,127,354.76 |
| 010-1-1-0-1407 | 11 | Security Services | 6,000,000.00 | 1,984,160.00 |
| 010-1-1-0-1408 | 11 | Lease Rental for Vehicles procured Under Operatonal Leasing Other | 44,600,000.00 | 15,791,922.78 |
| 010-1-1-0-1409(138) | 11 | Machinery and Office Equipment Service Agreements | 10,000,000.00 | 1,807,511.83 |
| 010-1-1-0-1409(139) | 11 | Vehicle Insurance | 2,000,000.00 | 1,154,528.67 |
| 010-1-1-0-1409(140) | 11 | Miscellaneous Services Expenditure | 4,380,000.00 | 1,662,356.40 |
| 010-1-1-0-1505 | 11 | Subscriptions and Contributions Fee | 5,500,000.00 | 0.00 |
| 010-1-1-0-1506 | 11 | Property Loan Interest to Public Servants | 900,000.00 | 379,377.51 |
| 010-1-1-0-2001 | 11 | Buildings and Stuctures | 40,000,000.00 | 12,306,773.65 |
| 010-1-1-0-2003 | 11 | Vehicles | 1,000,000.00 | 0.00 |
| 010-1-1-0-2102 | 11 | Plant, Machinery and Equipment | 15,000,000.00 | 868,993.20 |
| 010-1-1-0-2103 | 11 | Furniture and Office Equipment | 50,000,000.00 | 10,495,317.56 |
| 010-1-1-0-2401 | 11 | Staff Training | 5,000,000.00 | 273,500.00 |
| 010-1-1-3-2509 | 11 | Bribery and Corruption Awarenees Programme for the Public (Other) | 30,000,000.00 | 21,280.50 |
| 010-1-1-5-2509 | 11 | Facilitation of implementing Anti-Corruption Act | 270,500,000.00 | 2,785,612.55 |
| | | **Total** | 1,374,000,000.00 | 448,598,744.30 |

## 6.4 நிதி முன்னேற்ற சாரம்சம் 2025.06.30 ஆம் திகதிக்கு

| | வரவுசெலவு ஒதுக்கீடு 2025 | 2025.06.30 ஆம் திகதிக்கு முன்னேற்றம் |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 962,500,000.00 | 421,847,266.84 |
| மூலதனச் செலவினம் | 411,500,000.00 | 26,751,477.46 |
| **மொத்தம்** | **1,374,000,000.00** | **448,598,744.30** |

## 6.5 ஆளணித் தகவல்கள் 2025.06.30

| மட்டம் / நிலை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி |
|---|---|---|
| சீரேஷ்ட மட்டம் | 63 | 41 |
| மூன்றாம் நிலை | 218 | 7 |
| இரண்டாம் நிலை | 242 | 107 |
| ஆரம்ப நிலை | 126 | 78 |
| **மொத்தம்** | **649** | **233** |
| இலங்கை பொலிசின் இருநிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்டு சேவைப் புரியும் புலனாய்வு உத்தியோகத்தர்கள் | 283 | 256 |
| **முழு மொத்தம்** | **932** | **489** |